# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண்.28

## செய்தி மற்றும் விளம்பரம்

மானியக் கோரிக்கை எண்.30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

அறிவிப்புகள்

2023 – 2024

**மு.பெ. சாமிநாதன்**

செய்தித் துறை அமைச்சர்

## மானியக் கோரிக்கை எண்.28

# செய்தி மற்றும் விளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செய்தித் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பாக 20 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மேலும், இந்த அறிவிப்புகளை வெளியிட அனுமதி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பெ. சாமிநாதன்**
**செய்தித் துறை அமைச்சர்**

# அட்டவணை


| வ. எண். | செய்தி மற்றும் விளம்பரம் அறிவிப்புகள் விவரம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சுமார் ரூபாய் 80 கோடியில் புனரமைப்புப் பணிகள் | |
| 2 | டாக்டர் சி. நடேசனார், சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோருக்கு வரலாற்றுச் சின்னம் – திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம், சென்னை | |
| 3 | தென்காசி மாவட்டம் விசுவநாதப்பேரியில் சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடி – திருவுருவச் சிலை | |
| 4 | சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி – திருவுருவச் சிலை | |
| 5 | சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" – திருவுருவச் சிலை | |
| 6 | சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது பிறந்த நாள் – அரசு விழாவாகக் கொண்டாடுதல் | |
| 7 | ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் தியாகி கொடிகாத்த குமரன் – அரங்கம் | |
| 8 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் பெருந்தலைவர் கு.காமராஜர் – திருவுருவச் | |

| | | |
|---|---|---|
| | சிலை | |
| 9 | மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் அரங்கம் | |
| 10 | வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் தியாகி அண்ணல் தங்கோ – திருவுருவச் சிலை | |
| 11 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை – நினைவு இல்லத்தில் மார்பளவுச் சிலை | |
| 12 | பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி மதுரை மாநகரில் திருவுருவச் சிலை | |
| 13 | சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம் | |
| 14 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அதிநவீன படப்பிடிப்புத் தளங்கள் | |
| 15 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவுகள் உயர்த்துதல் | |
| 16 | தலைமையிடப் பயன்பாட்டிற்கென கணினி, மடிக்கணினி, அச்சுப்பொறி, நகலெடுக்கும் இயந்திரம் கொள்முதல் | |

| | | |
|---|---|---|
| 17 | முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாதம் ரூ.10,000–ல் இருந்து ரூ.12,000/– ஆகவும் மற்றும் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.5,000–ல் இருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். | |
| **வ. எண்.** | **எழுதுபொருள் மற்றும் அச்சு அறிவிப்புகள் விவரம்** | **பக்கம்** |
| 1 | சென்னையில் உள்ள அரசு மைய அச்சகத்திற்கு ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். | |
| 2 | அரசு கிளை அச்சகங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில், 8 எண்கள் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft), 2 எண்கள் காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளு வண்டிகள் (Hydraulic Reel Loading Trolley), 8 எண்கள் ஹைட்ராலிக் நகர் அடிமேடைகள் (Hydraulic Pallet Trolley) மற்றும் 15 எண்கள் கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) ஆகியவை கொள்முதல் செய்யப்படும். | |
| 3 | பொது மக்களின் விருப்பத்தின் பேரில் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். | |

1. **சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்.**

உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டுச் செல்ல வள்ளுவர் கோட்டம் 1976ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக திகழும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் **ரூபாய் 80 கோடி** மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்.

**2. டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் சிறப்புகள், பெருமைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறியும் வகையில் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்றுச் சின்னம் அமைகின்ற அளவிற்கு திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் தலைநகர் சென்னையில் அமைக்கப்படும்.**

திராவிட இயக்கத் தீரர்களான, மறைந்த டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் சிறப்புகள், தொண்டுகள், பெருமைகளை நினைவு கூறும் வகையிலும், எதிர்காலத் தலைமுறையினர் அறியும் வகையிலும் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்று ஆவணமாகத் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் சென்னையில் **ரூபாய் 5 கோடி** மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**3. சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம் விசுவநாதப்பேரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

மன்னர் பூலித்தேவர் படையின் முக்கியத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம் விசுவநாதப்பேரியில் **ரூபாய் 50 இலட்சம்** மதிப்பீட்டில் திருவுருவச் சிலை **அமைக்கப்படும்.**

4. **சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்ற வீராங்கனை குயிலி அவர்களுக்கு சிவகங்கையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

சிவகங்கை மாவட்டத்தில், சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து அதைத் தகர்த்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி அவர்களுக்கு சிவகங்கையில் **ரூபாய் 50 இலட்சம்** மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

**5. சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்குத் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரரான "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் **ரூபாய் 50 இலட்சம்** மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

6. சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது பிறந்த நாளான ஜூன் 10 அன்று அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில் அன்னாரது பிறந்த நாளான ஜூன் 10 அன்று அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

**7. ஈரோடு மாவட்டம், சென்னிமலையை சேர்ந்த சுதந்திரப் போராட்ட தியாகி கொடிகாத்த குமரன் அவர்களுக்கு சென்னிமலையில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும்.**

ஈரோடு மாவட்டம், சென்னிமலையைச் சொந்த ஊராகவும், குமாரசாமி என்ற இயற்பெயரைக் கொண்டும், இந்தியச் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி தன் உயிரைத் துறந்தவருமான தியாகி கொடிகாத்த குமரனின் உயிர்த் தியாகத்தைப் போற்றி, அன்னாருக்கு ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் **ரூபாய் 3 கோடி** மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும்.

**8. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தினை நிறைவேற்றக் காரணமாயிருந்த பெருந்தலைவர் கு.காமராஜர் அவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தை நிறைவேற்றக் காரணமாயிருந்த பெருந்தலைவர் கு.காமராஜர் அவர்களுக்கு **ரூபாய் 50 இலட்சம்** மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

**9. மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் அரங்கம் அமைக்கப்படும்.**

தமிழ் மொழி மீது தீராத பற்றுக் கொண்டு, இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் **ரூபாய் 3 கோடி** மதிப்பீட்டில் அரங்கம் அமைக்கப்படும்.

**10. தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

தமிழ்மொழி மீது தீராத பற்றுக் கொண்டு, வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியும், கள்ளுக்கடை மறியல், வைக்கம், சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாக்கிரகம் மற்றும் நீல் சிலை சத்தியாக்கிரகம் ஆகிய போராட்டங்களில் கலந்துக் கொண்டு சிறைத் தண்டனை பெற்று மடிந்த அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் **ரூபாய் 50 இலட்சம்** மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

**11. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் அன்னாருக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்படும்.**

தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர், தேசியப் போராட்டத் தியாகி, உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தின் வழிநடைப் பாடல் ஆசிரியர் மற்றும் பத்ம பூஷண் பட்டம் பெற்றவருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு, நாமக்கல் நகரில் அன்னாரின் நினைவு இல்லத்தில் **ரூபாய் 20 இலட்சம்** மதிப்பீட்டில் மார்பளவுச் சிலை அமைக்கப்படும்.

**12. பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரை மாநகரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.**

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்த சாலைக்கு டி.எம்.சௌந்தரராஜன் சாலை எனப் பெயர் சூட்டப்பட்டது. மேலும், அவரது புகழைச் சிறப்பிக்கும் வகையில் மதுரை மாநகரில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

**13. சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public – Private Partnership) அமைக்கப்படும்.**

சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public – Private Partnership) அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்க ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அதிநவீன படிப்பிடிப்புத் தளங்கள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.**

மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் நுட்பத் தரத்தினை உயர்த்துவதற்காகவும், திரைப்படத்துறை மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 32,280 சதுர அடி அளவில் 1–வது படப்பிடிப்புத் தளமும், 40,672 சதுர அடி அளவில் 2–வது படப்பிடிப்புத் தளமும், 22,596 சதுர அடி அளவில் 3–வது மற்றும் 4–வது படப்பிடிப்புத் தளங்கள் என மொத்தம் 4 படப்பிடிப்புத் தளங்கள் நவீன தொழில் நுட்பங்களுடன் அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் அமைக்கப்படும்.

**15. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவுகள் உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களின் நலன் கருதி, இறுதித் திட்ட குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினம் ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**16. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடப் பயன்பாட்டிற்கென கணினி, மடிக்கணினி, அச்சுப்பொறி, நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவை கொள்முதல் செய்யப்படும்.**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடத்தில் உள்ள பிரிவுகள் மற்றும் அலுவலர்களின் பயன்பாட்டிற்கென 20 கணினிகள், 5 மடிக்கணினிகள், 20 அச்சுப்பொறிகள் மற்றும் 1 நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவை **ரூபாய் 22 இலட்சம்** மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

17. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாதம் ரூ.10,000–ல் இருந்து ரூ.12,000/– ஆகவும் மற்றும் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.5,000–ல் இருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் செய்திகளாக தொகுத்து மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கிட அயராது பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் ஓய்வுக்குப் பின்னர் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு அரசின் சார்பில் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் வாழ்நாளில் சுமார் 70 ஆண்டுகள் பத்திரிகையாளராகவே பணியாற்றினார்.

முரசொலி நாளிதழில் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தன் உடன்பிறப்புகளுக்கு தினந்தோறும் கடிதம் மூலம் சமூக, பொருளாதார ஏற்ற தாழ்வு குறித்த விழிப்புணர்வு கட்டுரைகளை எழுதி சிறந்த பத்திரிகையாளராக விளங்கினார். எனவே, அவரது பிறந்த நாள் நூற்றாண்டை முன்னிட்டு பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாதம் ரூ.10,000ல் இருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

அதேபோன்று, ஓய்வூதியம் பெற்று வரும் பத்திரிகையாளர்களின் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியமாக தற்போது ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம்

ரூ.5,000-ல் இருந்து ரூ.6,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மானியக் கோரிக்கை எண்.30

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## அறிவிப்புகள்

## 2023 – 2024

1. **சென்னையில் உள்ள அரசு மைய அச்சகத்திற்கு ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

நிதிநிலை அறிக்கை தொடர்பான பணிகள், தமிழ்நாடு சட்டமன்ற பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் வாழ்த்து அட்டைகள், கடித தாட்கள், உறைகள், நாட்குறிப்பேடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடு, அரசு மாத நாட்காட்டி மற்றும் தேர்தல் பணிகள் போன்ற அவசர பணிகள் குறுந்தகடு (CD) வடிவில் பெறப்பட்டு, CTP அச்சுத் தகடு தயாரிப்பதற்கு ஏதுவாகவும், நவீன இயந்திரங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாலும் பழைய

தொழில்நுட்பமான அச்சுத் தகடுகள் (PS Plates) சந்தையில் தயாரிப்பது அரிதாகிவிட்டதாலும், ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**2. அரசு கிளை அச்சகங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில், 8 எண்கள் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft), 2 எண்கள் காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளு வண்டிகள் (Hydraulic Reel Loading Trolley), 8 எண்கள் ஹைட்ராலிக் நகர் அடிமேடைகள் (Hydraulic Pallet Trolley) மற்றும் 15 எண்கள் கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) ஆகியவை கொள்முதல் செய்யப்படும்.**

மதுரை கோ. புதூர் மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி, காகித உருளையை ஏற்றி, தாங்கி பிடிக்க நவீன வசதியுடன் கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூ மேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) தலா 4 எண்கள் என மொத்தம் 8 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

விருத்தாசலம் மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் அச்சிட பயன்படும் காகித உருளைகளை எளிதாக கையாண்டு இயந்திரத்தில் பொருத்துவதற்கு காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி (Hydraulic Reel Loading Trolley) 2 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

திருச்சி, மதுரை கோ. புதூர், புதுக்கோட்டை மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டிடத்திலிருந்து மற்றொரு கட்டிடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) தலா 2 எண்கள் என மொத்தம் 8 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

மதுரை கோ. புதூர் அரசு கிளை அச்சகத்தில் தேர்தல் துறை, வருவாய்த் துறை,

விதைச் சான்றட்டை மற்றும் பொதுவான பணிகள், நிலைப்படுத்தப்படாத பதிவேடுகள் / படிவங்கள் ஆகிய பணிகளை குறுகிய காலத்தில் உடனடியாக செயலாக்கம் செய்து அனுப்புகை செய்ய வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி 10 digit கொண்ட கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) 15 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

**3. பொது மக்களின் விருப்பத்தின் பேரில் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.**

இயக்ககம் சென்னை, மதுரை மற்றும் திருச்சி அரசு கிளை அச்சகங்களில் தற்பொழுது துணை விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு பொதுமக்கள் சென்று வர ஏற்படும் காலவிரயம் மற்றும் பொருள் விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொது மக்களின் விருப்பத்தின் பேரில் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

**மு.பெ. சாமிநாதன்**

**செய்தித் துறை அமைச்சர்**